# JSA NEWSLETTER

ISSN 2792-131X

February 2022

Special Issue

## Jaffna Science Association




## School Science Programme - 2021

# JSA Newsletter
(Since 1991)

Volume 28 Issue 03

February 2022

ISSN 2792-131X

Published by:

Jaffna Science Association (JSA)

(Reg.No : G/L/2427)

Web

www.facebook.com/thejsa

Book design

T.T Design

Chief Editor

Mr. Thevanayagam Thevananth

thejsaeditor@gmail.com

Associate Editor

Dr(Mrs) T.Janani



Editorial Board

Mrs S. Thevarangini

Dr. N.Kanann

Dr.E.C. Jeyaseelan

Dr. S. Sivasinthuja


## வளரும் பயிருக்கு அறிவியல் உரம் தரும் விஞ்ஞானச் சங்கம்

இலங்கை வடபுலத்தில் அறிவியல் சிந்தனையை வளர்த்து அதன்வழி புதியபல பயன்மிக்க கண்டுபிடிப்புககளை ஊக்குவித்து மனிதகுல நன்மைக்காகப் பாடுபடும் நோக்கத்தோடு யாழ்ப்பாண விஞ்ஞானச்சங்கம் 1991 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சமூக அக்கறையுள்ளோரும் அறிவியல் புலமையாளர்களும் இணைந்து ஒரு தீர்க்கதரிசனத்துடன் ஆரம்பித்த யாழ்ப்பாண விஞ்ஞானச்சங்கம் தனது 30 ஆண்டுகளை நிறைவு செய்யும் இந்தச்சூழலில், பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞானப் போட்டிகளின் விபரங்கள் அடங்கிய சிறப்பு செய்தி இதழை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

அறிவியல் சார்ந்த சிந்தனைகளின் வளர்ச்சி தான் ஒரு சமூகத்தின் நிலைத்த வளர்ச்சிக்கான அடித்தளமாக அமையும். குறிப்பாக , அறிவியல் தேடலையும் சிந்தனையையும் வளரும் பயிர்களான சிறார்கள் மத்தியில் விதைத்து அதனை விருச்சமாக வளர்த்தெடுக்கும் பணி முக்கியமானது, அது கற்றறிந்த சான்றோரின் கடமை, பாடசாலைகள் அறிவியல்சார்ந்த சிறந்த அடித்தளத்தை சிறார்களுக்கு கொடுப்பதற்கு சமூகப்பங்களிப்பு முக்கியமானது. சமூகத்தின் ஒவ்வொரு துறைகளும் ’நீர்முகமுடியா கட்டிறுக்கங்களைக் கொண்டிருக்காது’ ( watertight compartment) ஒவ்வொரு துறையும் கொண்டும் கொடுத்தும் இருக்கின்ற போது நாம் வாழும் சமூகம் சிறப்பானதாக அறிவியல் பூர்வமானதாக அமையும். அதனால் தான் அறிவைப்பகிர்தலை யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் தனது முக்கிய பணியாகக் கொண்டுள்ளது.

இந்த இதழ் யாழ்ப்பாண விஞ்ஞானச்சங்கத்தின் நான்கு பிரதான பிரிவுகளான தூய விஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானம், மருத்-துவ விஞ்ஞானம் மற்றும் சமூகவிஞ்ஞானம் ஆகிய துறையினரால் வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளின் தொகுப்பாக வெளிவருகின்றது. இந்தப்போட்டிகள் எதிர்கால விஞ்ஞானிகளை, சமூக ஆளுமைகளை வெளிக்காட்டி நிற்கின்றன. இந்த விளைவை அறுவடைசெய்த நடப்பாண்டின் செயற்குழு மற்றும் ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றிகள்.

திரு. தேவநாயகம் தேவானந்த்
பிரதம ஆசிரியர்









# வடக்கு மகாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞானப்போட்டிகள் -2021/2022

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், வருடாந்தம் வடமாகாண மாணவர்களிடையே விஞ்ஞான போட்டி நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றது. இம்முறை 'நெருக்கடியின் போது அறிவியல் வெற்றிக்கான அத்தியாவசிய திறன்களை வெளிப்படுத்துதல்' எனும் தொனிப்பொருளிற்கு ஏற்ப போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இவையனைத்தும் 2021 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் ஆரம்பித்து 2022 ஆம் ஆண்டு தை மாதம் வரை நடைபெற்றன. இவ் நிகழ்ச்சியில் விஞ்ஞான வினாவிடைப்போட்டி, விஞ்ஞான பேச்சுப்போட்டி, இயற்கை குறிப்பேட்டுப்போட்டி, விஞ்ஞான சுவரொட்டிப் போட்டி, விஞ்ஞான கண்காட்சிப்போட்டி, மற்றும் பாடசாலை தோட்டப்போட்டி என்பன நடைபெற்றன.

தற்போதைய கோவிட் நோய்த் தொற்று காலப்பகுதியில் இப் போட்டியினை நாம் பல்வேறு தளங்களில் குறிப்பாக மெய்நிகர், நேருக்குநேர் தளங்களில் நடாத்தி நிறைவேற்றியுள்ளோம். கல்விச்செயற்பாடுகள் பலசவால்களைச்சந்தித்துக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், எமது விண்ணப்பங்களை சரியான முறையில் பாடசாலைகளுக்கு அனுப்பி எமக்கு உதவியளித்த கல்வித்திணைக்கள அதிகாரிகளுக்கும், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். மேலும் போட்டிகளை பாடசாலைப்பிள்ளைகளுக்காக பெரும் ஆர்வத்துடன் வெற்றிகரமாக நடாத்திமுடித்த யாழ்ப்பான விஞ்ஞான சங்க உறுப்பினர்களுக்கும் வாழ்த்துக்களையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பதக்கங்கள், சான்றிதழ்கள், கேடயங்கள் என்பன யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினரின் வருடாந்த அமர்வில் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதற்கான முழுமையான அனுசரணையை 'ரட்ணம் அறக்கட்டளை நிறுவனத்தினர் (பிரிட்டன்)' கடந்த ஐந்து வருடங்களாக தந்து பாடசாலை விஞ்ஞானப்போட்டியை சிறப்பித்து வருகின்றனர். எமது சமூகநலனுக்காக இப் பெரும் பணியினை ஆற்றிவரும் ரட்ணம் அறக்கட்டளை நிறுவனத்தினருக்கு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினரின் சார்பில் நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த இதழ்வெளியீட்டுக்கு அனுசரணை வழங்கிய கலாநிதி விஜயரத்தினம் ஜோன் மனோ–கரன் கென்னடி அறக்கட்டளையினருக்கும் எமது நன்றிகள் உரித்தாகும்.



கலாநிதி ஜனனீ தேவானந்த்
பாடசாலை விஞ்ஞானப்போட்டி பொறுப்பாளர்,
உதவி பொது செயலாளர்
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்

இதழ் வெளியீட்டு அனுசரணை,

கலாநிதி விஜயரத்தினம் ஜோன் மனோகரன் கென்னடி அறக்கட்டளை
(Dr. Vijayaratnam John Manoharan Kennedy Trust )



# மனிதன் மரணத்தை வெல்வது சாத்தியமா?



1
இடம்
பேச்சுப் போட்டி
வடக்கு மகாகாணம்
உ. அஸ்வினி

'சாகாவரம் போல்
சோகம் உண்டோ
தீராக்கதையை
கேட்பார் உண்டோ
மாளாதது
கலையும் கவியும்
மாறாதது
என்றும் நம்
அறிவும் அன்பும்'

இற்றைக்கு 4.5 பில்லியன் வருடங்களுக்கு முன்னராக தோன்றியதாகக் கருதப்படும் உலகிலே 3.5 பில்லியன் வருடங்களுக்கு முன்னராக தனிக்கல அங்கியாக உருவாகிய முதல் உயிரினத்தில் இருந்து பரிணாமம் வளர்ச்சி கண்டு தரை, நீர், வளி ஏன்? வளிமண்டலத்தையும் தாண்டி வெளியையும் ஆராய்ந்து ஆட்சிபுரியும் மனித குலத்தின் பிரதிநிதிகளாகிய நாம் 21ம் நூற்றாண்டில் தடம் பதித்து உள்ளோம்.

"நெருதல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு"

அந்தவகையில் தினமும் எண்ணற்ற உயிர்கள் பிறக்கின்றன, வாழ்ந்து மடிகின்றன. மரணமும் ஜெனனமும் தான் வாழ்க்கை வட்டம். ஆனால் அன்று தொட்டு இன்றுவரை சாகாவரம் மனித இனத்தின் பெரு அவாவாக இருந்துவருகின்றது. சாகாவரம் வேண்டி பல காலம் இறைவனிடம் தவம் புரிந்தோரை புராணக்கதைகளில் கண்டோம். கற்கால மனிதனின் சராசரி ஆயட்காலம் 35 - 40 வருடங்கள். ஆனால் இன்று மனிதனின் சராசரி ஆயுட்காலம் அதிகரித்து விட்டது. மேலும் அதிகரிக்க ஆராய்ச்சிகள் நடைபெறா-மல் இல்லை. இவற்றுக்கு மேலதிகமாக மறுஜென்மம் எனும் கருத்து. நமது சமயம் மனிதனுக்கு 7 ஜென்மம் இருப்பதாக கருதுகின்றது. அதன் உண்மைத் தன்மை தொடர்பான ஆய்வும் நடந்த வண்ணமே உள்ளது.



மனிதனும் மரணமும் எத்தனையோ தடைகளைத் தாண்டி தலை நிமிர்ந்து நிற்கும் நம் மனித இனத்திற்கு அன்றும் இன்றும் வெல்ல முடியாதுள்ள சவால்- மரணம், என்று நாம் நினைப்போம். ஆனால் அவ்வாறு இல்லை. தனிமனிதன் மாண்டாலும் மனித இனம் வாழும். மரணம் என்பது சரீரத்திற்கே, மனித இனத்திற்கு இல்லை, எனது ஆன்மாவுக்கு இல்லை, என் புகழுக்கு இல்லை, என் கீர்த்திக்கு இல்லை, நான் என்ற உணர்வுக்கு இல்லை.

பெரிய பெரிய மகான்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள், தேசிய தலைவர்கள், மக்கள் வாழ்வை செம்மைப்படுத்தியவர்கள், எம்மை வாழ்வாங்கு வாழ வழி காட்டியவர்கள், வாழ்க்கையில் வென்றவர்கள், மக்கள் வாழ்வுக்காக தம்மை அர்ப்பணித்தோர் இவர்கள் எல்லாம் மரணத்திடம் தோற்ற-வர்களா?

மரணத்தை வென்ற மகான்கள்

கருணையே உருவான அன்னை தெரேசா, தேசிய தலைவர்களான நெல்சன் மண்டேலா, ஆபிரகாம் லிங்கன், தலைசிறந்த விஞ்ஞானிகளான தோமஸ் அல்வா எடிசன், அல்பேட் ஐன்ஸ்டீன், மகான்களான மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர், சேர்.பொன்.இராமநாதன், ஆறுமுகநாவலர் புரட்சித் தலைவர்கள், தலைசிறந்த கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் என இவர்கள் அனைவரும் வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்துள்ளோமா? இவர்கள் நம் நண்பர், உறவினர்களா? இருப்பினும் அவர்கள் பற்றி ஆர்வத்துடன் அறிகின்றோம். அவர்களுடைய உருவப்படத்தை வீட்டு சுவரில் மாட்டுகின்றோம். அவர்கள் வரலாற்றை வெறிகொண்டு கற்கின்றோம். அவர்கள் நம் முன்மாதிரி என மிடுக்குடன் சொல்கின்றோம்.
நாம் செய்த நல்லவைகள், சமூக சேவைகள், நாம் வாழ்ந்த வாழ்க்கை முறை, நாம் படைத்த சாதனைகள் இவைகள் தான் நாம் மரணத்தை வெல்வதற்கான ஆயுதங்கள்.

பூவுடல் மாண்ட பின்பும் கொண்டாடப்படுகின்ற, எடுத்துக்காட்டாகக் கூறப்படுகின்ற, தலைவனாக சிறப்பி-க்கப்படுகின்ற ஒவ்வொரு மாமனிதனும் மரணத்தை வென்றவனே.
அவர்கள் நாமம் காலம் கடந்தாலும் மக்கள் நாவின் உச்சரிப்பில் வாழும். மக்கள் இதய கோவிலில் வாழும்.

சாகாவரம் போல் சோகம் உண்டோ
தீராக்கதையை கேட்பார் உண்டோ
மாளாதது கலையும் கவியும்
மாறாதது என்றும் நம் அறிவும் அன்பும்

---------------------------------------



பேச்சுப் போட்டி -2021
மாகாணமட்டப் போட்டியாளர்கள்

# Science Oration Competition

Science Oration Competition organised by Jaffna Science Association annually, this year it was conducted in January 2022. Initially we have received 46 applications for the competition. First round of the competition was conducted virtually and out of 46 students, 15 students were selected for final competition.

## Details

### Round -01 Competition

Round 1 : 46 Students
Date: 29/05/2022
Venue : Staff Development Center
Judge Panel : Sarveswaran,Ajanthakumar,Vijayabaskaran and Dr Sriganeshan
Candidates : 46 Students (Northern Province)
Results : 15 students selected

### Final Competition

Round 2 (Final) : 15 Students
Date : 05/02/2022
Venue : Physics mini auditorium
Judge Panel : Prof Sivalingam Raja, Kumaran and Laleesan
Results : ist,2nd,2nd and 3rd places selected.
All participants have chance to get participation certificate

Programme in-charge : Mrs T Sivaskaran /Chairman -Section D/ JSA

### Round 1 competition winners

| | |
|---|---|
| Logika Annamalai | J/Chundikuli Girls' College |
| Arani Suthan | J/Chundikuli Girls' College |
| Ranesh Athiththan | St.John's College, Jaffna |
| Aswieni Uthayakumar | J/Kokuvil Hindu College |
| Anandasayanan Abishen | J/Jaffna Hindu College |
| Mary Lakshiya Arulgnanaseelan | J/Ilavalai Convent M.V |
| Lacksika Sivaskaran | J/Victoria College |
| Yoganathan Jakchayan | J/Victoria College |
| Sriskumar Gajan | J/Nelliady Central College |
| Kobini Sivaskaralingam | J/Methodist Girls' High School |
| Arumaithurai Sangeetha | J/Uduthurai Maha Vidyalayam |
| Ithayarooban Nilujah | J/Uduthurai Maha Vidyalayam |
| Baskaran Dirukshi | Mn/Sithivinayakar Hindu College |
| Rajanathan Disathman | KN / Kilinochchi Maha Vidyalayam |
| Ubaithullah Hafsha | V/Al Iqbal M.V |

## Final Winners

### First Place

Aswieni Uthayakumar -
J/Kokuvil Hindu College

### Second Place

Arani Suthan J/Chundikuli Girls' College
Sriskumar Gajan J/Nelliady Central College

### Third Place

Ranesh Athiththan St.John's College, Jaffna

# விஞ்ஞான பொது அறிவு வினா விடை போட்டி

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க மருத்துவ விஞ்ஞான பிரிவினரால் நடத்தப்பட்ட பாடசாலைக்கு இடையிலான இணையவழி மற்றும் நேரடி விஞ்ஞான பொது அறிவு வினா விடை போட்டி



யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் வருடாவருடம் பாடசாலைகளுக்கிடையிலும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலும் பல்வேறு வகையான போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இவ்வருடம் மருத்துவ விஞ்ஞான பிரிவினரால் பொது அறிவு வினா விடை போட்டி மாணவர்களிடையே நடாத்தப்பட்டது. இப்போட்டியானது மாணவர்களின் அறிவுத்திறன், விஞ்ஞானரீதியான சிந்தனைத் திறன், வாசிக்கும் ஆற்றல், தேடிக்கற்கும் திறன் போன்றவற்றை விருத்தி செய்யும் நோக்குடன் நடத்தப்பட்டது. இப்போட்டியானது மூன்று கட்டங்களாக நடத்தப்பட்டது. முதல் இரண்டு கட்டங்கள் இணையவழி ஊடாக விஞ்ஞான பொது அறிவு எழுத்துப் பரீட்சையாகவும் மூன்றாம் கட்டம் வாய் மூல வினா–விடை போட்டியாக நடைபெற்றது. முதல் கட்ட இணையவழி ஊடான பொது அறிவு எழுத்துப்பரீட்சை 06–01–2022 திகதி நடாத்தபட்டது, இப் பரீட்சையில் வடமாகாணத்திலுள்ள க. பொ. த. உயர்தர வகுப்புகளைக் கொண்ட 31 பாடசாலைகள் பங்குபற்றுகொண்டன, ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 5 மாணவர்கள் இப் பரீட்சையில் பங்குபற்றிகொண்டனர். ஒவ்வொரு பாடசாலையிலிருந்து பங்குபற்றிய போட்டியாளர்கள் பெற்ற மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் 9 பாடசாலைகள் இரண்டாம் கட்ட எழுத்துப்பரீட்சைக்கு தேர்ந்தேடுக்கப்பட்டது.

1. J/Hindu College
2. Mn/ De La Salle College Nanattan
3. Mn/St.Xavier's Boys' College
4. V/Vavuniya Tamil Madhya Maha vidyalayam
5. J/Victoria college
6. J/St. Patrick's college
7. J/Methodist Girls' High School
8. J/St.John's College
9. Kn/Kilinochchi Maha Vidyalayam

அத்துடன் இப் போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற முதல் 10 மாணவர்களும் தேர்ந்தேடுக்கப்பட்டனர்.

| School Name | Name of the students |
|---|---|
| J/Hindu College | Anandajothy Vithyashaker |
| J/Hindu College | Sivakonesan Gobiram |
| Mn/ De La Salle College | Nanattan Arulpragasam Angeline Amirtha Sruthy |
| Mn/St.Xavier's Boys' College | Antony Nimal Micheal Sharon |
| J/Victoria college | Paskaran Pathmajan |
| Mn/ De La Salle College | Nanattan Lorancepillai Mariyanajakam Abitha |
| V/Vavuniya Tamil Madhya Maha vidyalayam | Vimalarajah Vithuvarshan |
| J/Hindu College | Stelan Karunaithas Janush Jackshan |
| J/Hindu College | Pathmatheepan Miruthunjan |
| Mn/ De La Salle College | Nanattan Rubarajan Rubashalini |

இரண்டாம் கட்டமாக இணையவழி ஊடான பொது அறிவு எழுத்துப்பரீட்சை 07-01-2022 திகதி நடாத்தபட்டது. ஒவ்வொரு பாட-சாலையிலிருந்து பங்குபற்றிய போட்டியாளர்கள் பெற்ற மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் 3 பாடசாலைகள் மூன்றாம் கட்டம் வாய் மூல வினா-விடை போட்டி க்கு தேர்ந்தேடுக்கப்பட்டன.

மூன்றாம் கட்டமாக நேரடியான வாய் மூல வினா-விடை போட்டி 08-01-2022 திகதி Physics mini-Auditorium/ University of Jaffna இல் நடாத்தபட்டது. இதில் J/ Hindu College முதலாம் இடத்தையும் J/St.John's College இரண்டாம் இடத்தையும் J/Methodist Girls' High School மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.







## Winners -Quiz Competition

1. J/Hindu College
2.. J/St.John's College
3. J/Methodist Girls' High School

# SCHOOL GARDEN
# SCIENCE EXHIBITION COMPETITION

HIGHLIGHTS OF SCHOOL GARDEN PROGRAM AND SCIENCE EXHIBITION PROGRAM CODUCTED BY THE SECTION B OF THE JAFFNA SCIENCE ASSOCIATION (JSA)

The section B of JSA successfully organized, school garden program and science exhibition program on the 21st of January, 2022, via zoom platform. There were seven schools participated in school gardening program, whereas twenty-two schools participated in science exhibition program. The participants were very active and exhibited novel exhibits in the exhibition program. It was an amazing contribution to the section B of the JSA. Moreover, such two programs were examined by the following examiners based on the evaluation criteria.

1. Dr. K. Sooriyakumar
2. Dr. N. Kannan
3. Mr. K. Jeyavanan

Based on the evaluation outcome, the following schools were ranked in first three positions for the school garden program.and science exhibition programme

## Winners of School Garden

1st place

St. John's College, Jaffna

2nd place

MN/Talaimannar Pier GTMS

3rd place

J/Holy Family Convent (National School)

## Winners of SCIENCE EXHIBITION

### Junior Secondary Level

1st place

1st - Mn/St.Xavier's Boys' College

2nd Place

J/Hartley College

3rd Place

J/Hartley College

## Winners of SCIENCE EXHIBITION

### Senior Secondary Level

1st Place

J/Chundikuli Girls' College

2nd Place

J/Chithambara College

3rd Place

J/Hartley College

J/Aliyawalai C.C.T.M Vidyalayam

St.John's College, Jaffna

J/Uduthurai Maha Vidyalajam

### Advanced Level

1st Place

Kn / Kilinochchi Maha Vidyalaya

St.John's College, Jaffna

3rd Place

St.John's College, Jaffna

## SCHOOL SCIENCE EXHIBITION competition


**Junior secondary**

3rd Place

Elilkumaran Suthaharan

Grade: 9 , Hartley College

Invention: Smart Gadget for Virtual Classes with Eye Protection




## SCHOOL SCIENCE EXHIBITION competition


**Junior secondary**

2nd Place

Kirupakaran Aswin

Grade: 9,J/Hartley College

Invention: Gas Leakage Detector



## SCHOOL SCIENCE EXHIBITION competition

### Senior Secondary Exhibition

1st Place

Vaishnaviey Karunananthan
J/Chundikuli Girls' College
Grade: 11

## Invention: Smart Dustbin



## SCHOOL SCIENCE EXHIBITION competition


### Senior Secondary Exhibition

2nd Place

Siththiravel Saravanan
Grade: 10 , J/Chithambara College

## Invention: Water & Land Ride Bicycle





## SCHOOL SCIENCE EXHIBITION competition

### Junior secondary

### 1st Place

Jebanesan Jebisan

Grade: 7,Mn/St.Xavier's Boys' College

## Invention: Sensor Blind Stick



## SCHOOL SCIENCE EXHIBITION competition

### Senior Secondary

### 3rd Place

J. Omshiyam Shankar

Grade: 11, St.John's College

## Invention: Mindful Living with COVID-19 and etc.




## SCHOOL SCIENCE EXHIBITION competition

### 3rd Place

Sivanesan Shinoahan

Grade: 11, J/Hartley College

Invention: Simple Model of Iron Separating Vacuum Cleaner




### 3rd Place

Mozhinila Sivagnanam

Grade: 10, J/Aliyawalai Church of Ceylon Tamil Mixed Vidyalayam


Invention: Smart Dustbin with Backing System



## SCHOOL SCIENCE EXHIBITION competition
### Senior Secondary

## 3rd Place
Abinaya Suthanthiran
Kaviya Rasikaran
Athithya Balachchanthiran
Grade: 10 , J/Uduthurai Maha Vidyala

## Invention: Naval fruit Jam production for Diabetes



## SCHOOL SCIENCE EXHIBITION competition
### Advanced Level




## 1st place
Rajanathan Dishathman
Grade: 13,
Kn / Kilinochchi Maha Vidyalayam

## Invention
## Earthworm Cubes

## SCHOOL SCIENCE EXHIBITION competition

## Advanced Level





### 1st place

Ravirajan Ahkash
Grade:13,St.John's College, Jaffna

Invention
Low Cost Voice Controller Automation

SCHOOL SCIENCE EXHIBITION competition

Advanced Level



### 3rd Place

Ravirajan Sarvesh
Grade: 12: St.John's College, Jaffna

Invention
Sun Tracking Solar Panel

# Poster competition and Nature Diary contest.

The section A (pure science) conducted a poster competition and Nature Diary contest. Both competitions were conducted among three levels of students (Grade 6-9, Grade 10-11 and Advanced level). For each of the competitions, about 200 applications were received online. A panel of evaluators went through the e-versions of the nature diaries on 19.01.2022 and selected the first three in each level. The panel evaluated the e-posters on 20.01.2022, and in that first-round best five were selected for each level. The selected students were invited for an interactive session with evaluators via zoom on 26.01.2022, and the first three posters were selected.

The following students are the winners of the Nature Diary contest & Poster Competition

## winners of the Poster Competition

| Grade | Place | Student Name | School | Teacher in-charge |
|---|---|---|---|---|
| 6-9 | 1st | Miss. Kalaippiriya Sivapalan | KN/Kovilvajal .C.T.M.S | Miss.K.Sansiga |
| | 2nd | Miss. Jeyanikha Janakakumar | Chundikuli Girls college | Mrs.S.V.Piyanthan |
| | 2nd | Miss. Jeeviga Janakakumar | Chundikuli Girls college | Mrs.S.V.Piyanthan |
| 10-11 | 1st | Miss. Joiline Tharmika Jeyaraj | Jaffna Holy Family Convent | Gishajiny Rajakumar |
| | 2nd | Miss. Kudish Navajonshan Mary Joncy | J/St.James Girls School | Mrs.M.Theeban Thelishan |
| | 3rd | Miss. Gunasekaram Kujiliny | J/Vadamaradchy Hindu girls College | Mrs.S.Vimalan |
| AL | 1st | Mr. Rajanathan Dishathman | Kn / Kilonichchi Maha Vidyalam | Mrs. Lavanja Selvataja |
| | 2nd | Miss. Sureshkumar Nishani | J/St.James Girls School | Mrs.M.Theeban Thelishan |
| | 3rd | Mr. Vimalan Abisanth | St.John's college, Jaffna | S.Sriskandarajah |

# winners of the Nature Diary contest


| Grade | Place | Student Name | School | Teacher in-charge |
|---|---|---|---|---|
| 6-9 | 1st | Surabi Kirubakaran | J/Vembadi Girls' High School | Mrs Tharani Selvasuthandran |
| | 2nd | Miss.Jathushana Remington Ratnakumar | J/Chundikuli Girls college | Mrs.Maria Jenita Aravinthan |
| | 3rd | Miss. Jenat Joyaleen Joe Inparaj | J/Chundikuli Girls college | Mrs.Maria Jenita Aravinthan |
| 10-11 | 1st | Jeevanantham Omshiyamshankar | J/St.John's college | S.Muhunthan |
| | 2nd | Miss. Christina Anujita Thavaranjit | J/Vembadi Girls' High School | Mrs Tharani Selvasuthandran |
| | 3rd | Miss. Mithushika Jeyachanthiran | V/Vipulanantha college | Miss.V.Sarmila |
| AL | 1st | Miss. Jericksha Wesley Judeson | J/Chundikuli Girls college | Mrs.Maria Jenita Aravinthan |
| | 2nd | Gowrishankar Dinoshan | J/St.John's college | S.Muhunthan |
| | 3rd | Rajanathan Dishathman | Kn/Kilinochchi Maha Vidyalayam | Miss.Lavanja Selvarajah |

# Poster competition

## 1st place

(Grade 12-13)

Mr. Rajanathan Dishathman Kn / Kilonichchi Maha Vidyalam



# Poster competition

1st place
(Grade 6-9)
Miss. Kalaippiriya Sivapalan KN/Kovilvajal .C.T.M.S




# Poster competition

**1st Place**
(Grade 10-11)
Miss. Joiline Tharmika Jeyaraj Jaffna Holy Family Convent





## School Gardening Competition

First Place

St John's College



## School Gardening Competition

Second Place

MN/Talaimannar Pier GTMS



## School Gardening Competition

Third Place

J/Holy Family Convent (National school)

# பேரிடர்காலக்கல்வி

3
இடம்
பேச்சுப் போட்டி
வடக்கு மாகாணம்



ரனேஷ் ஆதித்தன்
சென்.ஜோன்ஸ் கல்லூரி

ஊன் எரித்து குயிலி காத்தாம், சாதல் வென்ற பண்டாரவன்னியன் வாளோடுவேலாம், என் நெஞ்சுதுளைத்து குருதி எடுத்து உதிர்த்துப் போடினும் என்னுள் ஊற்றாய்ப் பெருகும் என் வள்ளுவத் தமிழே, உனைவணங்கி அவைவர தமிழ்ப்பெரும்பாட்டன் இராவணன் துணை.

இன்றைய தலைப்பு பேரிடர்காலக் கல்வி, ஏன்? ஏன் இன்று இந்தத்தலைப்பு? அனைவருக்கும் தெரிந்தவிடயம் இன்று நாம் எதிர்கொண்டிருக்கும் மிகப்பெரியபேரிடர் கொரோனா. ஆனால் இன்று மட்டுந்தான் நாம் பேரிடரை சந்தித்துள்ளோமா? என்றால் இல்லை. என்று முதலுயிரி இந்த உலகில் தோன்றியதோ அன்றிலிருந்தே சுனாமி, நிலநடுக்கம்,கொள்ளை நோய்கள், இனப்படுகொலை போன்ற பல்வேறு பேரிடர்களை சந்ததித்துக்கொண்டேதான் இருக்கின்றோம்.

இத்தகைய பேரிடர்காலத்தில் மனிதன் தப்பிப்பிழைப்பதே கேள்விக்குறியாக இருக்கின்ற பொழுது, மனிதனின் அறிவுவளர்ச்சிக்குத் தேவையான கல்வி என்பது மறுக்கப்பட்ட ஒன்றாகவே காணப்பட்டது. ஆனால் இம்முறை ஒரு ஆச்சரியம் ! ஆம் !உலகமே இரண்டு வருடங்கள் முற்றாக முடங்கியிருந்த பொழுதும் இந்தமுறை கல்வி பெரும்பாலானோருக்கு கிடைத்தது.

எப்படி? நிகழ்நிலைக் கல்வி மூலம், அத்தகைய நிகழ்நிலைக்கல்வி என்றால் யாது? அது ஏற்படுத்தியிருக்கும் சாதகங்கள், பாதகங்கள் பற்றிய ஒருஅலசலே இன்று என்னுடைய பேச்சாகும். அந்தவகையில் நிகழ்நிலைக் கல்வி என்றால் யாது? தேடற்கருவிகள், நிகழ்நிலைக் கருத்தரங்குச் செயலிகள், நிகழ்நிலைக் கலந்துரையாடல் செயலிகள் போன்றவற்றை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கற்றல், கற்பித்தல் பொறிமுறைகளே நிகழ்நிலைக் கல்வி எனப்படும்.

“நாலைந்து வீதிகளுக்கு ஒன்று வீதம்
நல்லதுவாய் வசதியாய் இல்லம் வேண்டும்“ என்று

ஒவ்வொரு தனிநபருக்கும் கிடைக்கவேண்டிய கல்விச்சாலை வசதிபற்றி அன்று கனவுகண்டார் பாரதிதாசன். அந்தக் கனவு இன்று நனவாகியுள்ளது. நிகழ்நிலைக்கல்வி மூலம். ஆம் ! இன்று எம் ஒவ்வொருத்தருடைய வீட்டிலும் இந்த உலகத்திலுள்ள பெரும்பாலான நூல்களை உள்ளடக்கிய நூலகம், நிகழ்நிலை நூலகம் காணப்படுகின்றது. முந்தைய காலங்களில் எமக்கு ஒரு தகவல் வேண்டுமெனில் நூலகத்திற்குச் செல்லவேண்டும். அங்கு பல பத்தகங்களை புரட்ட வேண்டும். எவ்வாறிருந்தும் நாம் தேடியதகவல் சிலவேளை கிடைக்கலாம், சில வேளைகிடைக்காமலும் போகலாம். வெளியேசெல்லவேமுடியாத இந்த பேரிடர்காலத்தில் எதற்கும் வாய்ப்பில்லை. ஆனால் இன்று நாம் இருந்த இடத்திலிருந்து கொண்டே அல்பேர்ட் ஐன்சுடீனின் சார்பியல் கோட்பாடு பற்றிய நூல்களையும் வாசிக்க் முடியும், வில்லியம் சேக்பியரின் இலக்கியம் பற்றிய நூல்களையும் வாசிக்க முடியும். உலகம் முழுவதிலும் கல்விச் சமூகத்தின் வளங்கள் நிகழ்நிலைக் கல்வி மூலம் பரவலாக்கம் செய்யப்பட்டுள்ளன.

அதுமாத்திரமல்ல, நடுநிலைத் தன்மை வாய்ந்த கல்வி, நிகழ்நிலைக்கல்வி மூலம் வழங்கப்படுகின்றது. ஆம், நாம் எமது அரசு வரலாற்றுப் புத்தகத்தை நோக்குவோமேயானால், எங்கே எங்கள் அடங்கா-ப்பற்று, பண்டாரவன்னியன்? எங்கே எங்கள் சங்கிலியன்? இவர்களிற்கு எமது பாடப்புத்தகங்களில் எத்தனை

பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன ? பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளனவா? ஏன் இவர்களிற்கு வீரம் இல்லையா? அல்லது தமிழர்கள் என்பதாலா? ஆக, இதுவரையான எமது கல்வி முறை பக்கச் சார்பானதாகவே இருந்து வந்தது. ஆனால் இன்று நிகழ்நிலைக் கல்வியில் நிகழ்நிலையில் எம்மால் அனைத்துத் தரப்பினரிடமிருந்து வரும் தகவல்களையும் பெறமுடியும். நிகழ்நிலைக் கல்வி மூலம் நடுநிலைத் தன்மையான கல்வி உறுதிப்படுத்தப்படுகின்றது.

ஆனால்,நிகழ்நிலைக் கல்வியில் சாதகங்கள் மாத்திரம் தான் உள்ளனவாஎன்றால், இல்லை பாதகங்களும் உள்ளன. அதிலும் நிகழ்நிலைக் கல்விமாணவர்களின் மனநிலையில் மிகவும் பாதகமான மாற்றங்களை ஏற்படுத்-துகின்றது. முக்கிமாக முன்பள்ளிமாணவர்களிடம்.

“ஓடிவிளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
காலை முழுவதும் விளையாட்டு பின் கனிவு கொடுக்கும் நல்லபாட்டு“

முன்பள்ளிப் பருவம் என்பது மாணவர்களின் மனப்பாங்கு விருத்தியடையும் பருவமாகும். அதாவது மாணவர்களிடம் எண்ணக்கருவாக்கம் நடைபெறும் பருவம். இந்த பருவத்தில் தான் மாணவர்களின் மனதில் கல்விபற்றி எண்ணக்கருக்கள் ஆழமாக விதைக்கப்பட வேண்டும். ஆனால் கல்விச் சுமையாகத் திணிக்கப்படக்கூடாது. விருப்பமாகவழங்கப்படவேண்டும்.

அதைத்தான் பாரதியார் அன்று கூறினார். நாமும் பின்பற்றி வந்தோம். ஆடல் மூலம் கல்வி,பாடல் மூலம் கல்வி, விளையாட்டின் மூலம் கல்வி, குழு வேலைகள் போன்று பற்பல நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் கல்வியைச் சுமையாக அல்லாது விருப்பமாக வழங்க வேண்டும்.

## இன்று நிகழ்நிலைக் கல்வியில் என்ன நடக்கின்றது?

சிறிய குழந்தைகள் என்பது மறக்கப்பட்டு, சிறிய மனிதர்களாகக் கருதப்பட்டு, அந்த பிஞ்சுகளை நான்கு சுவர்களினுள் அடைத்து, முன்னால் ஒருபெட்டியை( கணனியை) வைத்து, அந்தப் பெட்டியிலிருந்தபடி ஒரு சத்தம் வரும். அந்தச் சத்தம் தான் கல்வி எனச்சொல்லி கல்வியைத் திணித்து வருகின்றோம். இது அந்தப் பிஞ்சுகளின் மனதில் கல்வி மீது வெறுப்புகளை ஆழமாக விதைக்கும். இதன் விளைவு இன்று எமக்குத் தெரியாது. ஆனால் எதிர்காலத்தில் கல்வி மீது அதீத வெறுப்பை கொண்ட மாணவர் சமூதாயத்ததை உருவா-க்குவதற்கான அடிக்கல்லை இன்று நட்டுக்கொண்டிருக்கின்றோம் என்பதை மறக்கக் கூடாது.

அதுமட்டுமல்ல,“வேதத்தை கேட்டாலே பாலகனென்றாலும் தலைகீழாகக் கட்டி வைத்து தலையை வெட்டு“ என்ற வழியிலிருந்து விலத்தி இன்று அனைவருக்கும் தரமான சமமான கல்வி என்ற உயர்நிலையை அடைந்துள்ளோம். எமது ஈழத்தை பொறுத்தவரை இலவசக் கல்வியின் தந்தை C.W.Wகன்னங்கரா போன்ற பலரின் உழைப்பால் நாம் இலவசக்கல்வி எனும் அமிர்தத்தை அடைந்தள்ளோம். ஆனால் நிகழ்நிலைக் கல்வி ஆனது இலவசக்கல்வியை கேள்வி கேட்கும் விதமாக அமைந்துள்ளது. ஆம், நிகழ்நிலைக் கல்வியை மேற்கொள்வதற்காக கணணி, தொலைபேசி போன்ற உபகரணங்கள், வலையமைப்பு போன்றவற்றிற்கான ஆரம்ப செலவுகள் மிகஅதிகமாக உள்ளன. ஆகவே பல ஏழை மாணவர்கள் நிகழ்நிலைக் கல்வியை கற்க முடியாது யோயுள்ளது. இது எம் இலவசக் கல்வியின் அடிப்படைச் சித்தாத்தத்தையே அசைத்துப் பார்க்கின்றது.

ஆகவே நிகழ்நிலைக் கல்வியில் பலநன்மைகளும் உள்ளன. பலதீமைகளும் உள்ளன. ஆக இந்த நிகழ்நிலைக் கல்வியில் எமது அணுகுமுறை எவ்வாறு இருக்கவேண்டும். நிகழ்நிலைக் கல்வியில் சாதகங்கள் உள்ளன என்று அதை நாம் முற்றாக ஏற்கவும் முடியாது, பாதகம் என்று முற்றாக புறந்தள்ளவும் முடியாது. விரும்பியோ விரும்பாமலோ இன்று எமது வாழ்வியல் மாற்றத்திற்கேற்ற கல்வியியல் மாற்றமாக நிகழ்நிலைக் கல்விமாறியுள்ளது. இங்கு பிரச்சினை நிகழ்நிலைக் கல்வி அல்ல! அனைவருக்கும் கிடைக்கக்கூடிய நேரடிக்கல்வி அற்ற தனித்தநிகழ்நிலைக் கல்வி. ஆகவே,கொரோனா தொற்று குறைந்து வரும் காலத்திலே எமது அத்தியாவசிய கற்றலுக்கு நேரடிக் கல்வியையும், மேலதிக கல்விமேம்பாட்டிற்கு நிகழ்நிலைக் கல்வியையும் கைக்கொண்டு, “கற்போம், கற்பிப்போம், புரட்சிசெய்வோம்“ என்ற அண்ணல் அம்பேத்கரின் வாக்கிற்கிணங்க வாழ்வோம் எனக் கூறி விடை பெறுகின்றேன்.

# பேரிடரை எதிர்கொள்வதில் விஞ்ஞானத்தின் வகிபங்கு



செல்வி. ஆரணி சுதன்
சுண்டிக்குளி மகளீர் கல்லூரி

2
இடம்
பேச்சுப் போட்டி
வடக்கு மாகாணம்

பேரிடர் என்பதை பெரிய இடர் எனப் பிரிக்கமுடியும். அது நேரடியாக பெரும் துன்பம் எனப் பொருள்படும். ஆனால் உண்மையில் ஒரு இடர் தோன்றி அதன் விளைவு மனிதனை நீண்டகாலமாக அல்லல்ப்படுத்துமாக இருந்தால் அதுவே பேரிடராகும். பேரிடர் என்பது இருவகைப் படும். ஒன்று இயற்கைப்பேரிடர் மற்றையது செயற்கைப் பேரிடராகும். இயற்கைப்பேரிடருக்கு உதாரணம் சுனாமி, வெள்ளப்பெருக்கு, காட்டுத்தீ, எரிமலைவெடிப்பபு, பெரும் சூறாவளி மற்றும் தொற்றுநோய்கள் போன்றவையே. தவிர அனைத்து இயற்கை இடர்களும் இயற்கைப் பேரிடர் அல்ல. செயற்கைப் பேரிடர்கள் என்று பார்க்கும்போது உலகமகாயுத்தங்கள் அணுஆயுத பரிசோதனைகள் மற்றும் விஞ்ஞான ஆய்வுகளால் எற்படும் விபரீத விளைவுகளான கொரோனா போன்ற நோய்கள். அவ்வகையில் பேரிடரை வெற்றிகொள்ளலை இரு வகையில் நோக்கலாம் ஒன்று இடர் வருமுன் காத்து அதாவது விழிப்படைந்து இடரை வெற்றிகொள்ளல். மற்றையது இடர் வந்த பின் உரியமுறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு தாக்கங்களைத் தடுத்தல் அல்லது தாக்கங்களின் வீச்சினைக் குறைத்தல் ஆகும். அவ்வகையில் பேரிடரை வெற்றிகொள்வதில் விஞ்ஞானத்தின் வகிபங்கு என்று நோக்கினால், சுனாமி எனும் பேரிடர் 2004ம் ஆண்டு வருமுன் அதுபற்றி நமது மக்கள் அறிந்திருக்கவில்லை. சுனாமி ஏற்பட்டபோது 'கடல் வருது... கடல் வருது....' என்றார்கள். ஆனால் இன்று அது ஒரு சாதாரணமாக அறிமுகமான இடர்போல் ஆகிவிட்டது. அனர்த்த முகாமைத்துவ அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. விஞ்ஞானஆராய்வுகளின் விளைவால் பேரனர்த்தங்களை உருவாக்கக்கூடிய இயற்கை நிகழ்வுகளை முற்கூட்டியே கண்டறியப்படுகின்றது.



சமிக்ஞ்ஞை ஒலி எழுப்பும் உபகரணங்கள்வாயிலாக முன்னதாகவே அறிவிக்கப்படுகின்றது. அதன் காரணமாக மிகப் பெரிய இடர்களையெல்லாம் இலகுவாக அல்லது சிறிய அளவிலான சேதங்களோடு எதிர்கொள்ளமுடிகின்றது. 1964ல் சூறாவளி வரும்போது அதுபற்றிய முன்னறிவிப்புகள் இருந்திருக்கவில்லை. ஆனால் இன்று சில நாட்கள் சில மாதங்களின் முன்னரே எத்தனை தடவைகள் சூறாவளி தாக்கும் எப்பகுதியில் உருவாகி எப்பகுதிகளையெல்லாம் தாக்கம் என்று முன்னறிவிப்புக்கள் செய்யப்பட்டுவிடுகின்றது. வளிமண்டலவியல் பகுதிகளுக்கான உபகரணங்கள் கருவிகள் என்பன விஞ்ஞானத்தின் விந்தைகளே. அறிவிப்புக்கள் கிடைப்பதன் மூலம் பேரிடர்களிலிருந்து உரிய பாதுகாப்பு முறைகள் மூலம் எம்மைப் பாதுகாத்து வெற்றிகொள்ளல் முதன்மை நோக்கமாகும். பேரிடர் தோன்றிய பின் வெற்றிகொள்ளல் என்று நோக்கும் போது தற்கால உதாரணம் – கொரோனா ஆகும். கொரோனா விஞ்ஞான வளர்ச்சியின் ஒரு பெறுபேறென்றே கொள்ளப்படுகின்றது. இந்தக் கொரோனா கிருமிகள் மிக எளிய வழிமுறையில் இன்னொருவருக்கு தொற்றுக்குள்ளாகிவிடுகிறது. தொற்றும் முறைகளை விஞ்ஞான ஆய்வுகள் தெளிவாக கண்டுபிடித்துள்ளன. அதனால் தொற்றுக்குள்ளான ஒருவரிலிருந்து மற்றையவர்களுக்கு பரவிவிடாமலே காப்பாற்றும் வழிமுறைகள் அறிவிக்கப்படுகின்றன. சகலருக்கும் விழிப்பூட்டல்களைச் செய்யப்படுகின்றனர். பின்னர் சுகாதார விதிமுறைகள் நன்கு வலியுறுத்தப்படுகின்றன. இவை விஞ்ஞானம் திறந்துவிட்ட கதவுகளே!

இடர் தோன்றிய பின்னர் படித்தவர் முதல் படிக்காதவர்கள் வரை தகவல் மின்னல் வேகத்தில் பரவிவிடுவது தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பிறிதொரு வெற்றியாகும். அதாவது சீனாவின் ஹிவானில் கண்டறியப்பட்ட வைரஸ் பற்றி சீனா முழுவதும் அறியமுன் இலங்கை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒருவர் அறிகிறார். இது எதன் மூலம்? தகவல் தொழில்நுட்பம் மூலமென்றால் அதுவும் விஞ்ஞானத்தின் கூறு தான். அவ்வகையில் இடர் தோன்றும் முன்னரோ அல்லது தோன்றிய பின்னரோ உரிய நடவடிக்கைகளை பின்பற்றி இடரிலிருந்து பாதுகாத்து வெற்றிபெற உதவுவது விஞ்ஞானமே ஆகும். இன்று மனித சமுகம் பேரிடர்களைத் துணிச்சலோடு எதிர்கொள்வது விஞ்ஞான வளர்ச்சியின் பிரதிபிலிப்பேயாகும்.

போட்டியாளர்
இறுதிச்சுற்று
பேச்சுப் போட்டி
வடக்கு மாகாண மட்டம்

# இலங்கையில் சேதன விவசாயம் உணவுத் தன்னிறைவை ஏற்படுத்துமா?

செல்வன் இராஜநாதன் டிஷாத்மன்
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

தாய் தந்த மூச்சிற்கும், தமிழ் தந்த பேச்சிற்கும் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, உங்கள் முன்னிலையில் நான் பேச எடுத்துக்கொண்ட விடயம் இலங்கையில் சேதன விவசாயம் உணவுத் தன்னிறைவை ஏற்படுத்துமா?

இலங்கையானது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட அழகிய தீவாகும். இங்கு வருமானம் ஈட்டித் தருகின்ற பிரதான மூலம் விவசாயம் ஆகும். விவசாயத்திற்குள் வெறுமனே நெற்பயிர்ச்செய்கை மட்டும் அடங்காது தேயிலைப் பயிர்ச் செய்கை, தெங்குப் பயிர்ச்செய்கை போன்றவற்றையும் குறிப்பிடலாம். நமது அரசாங்கம் பல நடவடிக்கைகள் மேற்கொண்டு நமது நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்கிறது. ஆனால் இந்த சேதன விவசாயம் மட்டும் பெரிதளவில் வெற்றியளிக்கவில்லை. ஏனெனில் ஒரு சிறு உதாரணத்தை கூறி விளக்கலாம் என எண்ணுகிறேன். எங்களை எடுத்துக்கொண்டால் இலங்கையில் வசிக்கின்றோம், இலங்கை மத்திய கோட்டிற்கு அருகில் உள்ளது. இதனால் இங்கு சூடும், குளிரும் மாறி மாறி வரும். ஆனால் துருவப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக குளிரான காலநிலையே நிலவுகின்றது. இலங்கையில் வசிக்கும் நாங்கள் துருவப் பிரதேசங்களுக்கு சென்றால் அங்கே குளிரைத் தாங்க முடியாமல் கம்பளி அணிந்து, வெப்பநிலை சீராக்கி இவ்வாறு பல அடுக்குகள் பார்த்துத்தான் அங்கு வசிக்க பழகுகின்றோம். அதே போலத்தான் விவசாயமும் இதுவரை காலமும் அசேதன பசளையை பாவித்துவிட்டு திடீரென சேதனப் பசளையைப் பாவியுங்கள் என்றால் எவ்வாறு சாத்தியமாகும்.



நான்கு சுவர்களுக்குள் ஒரு முடிவை எடுத்துவிட்டு அதை நடை முறைப்படுத்தியே ஆக வேண்டும் என்று நிற்பது, தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்று சொல்வது போலத்தான் இருக்கிறது. இம் மாற்றம் நல்லது தான் அதைப் படிப்படியாக செய்திருந்தால் கண்டிப்பாக வெற்றியளிக்கும். நமது முன்னோர் சேதன விவசாயம் செய்து நமது நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்றிருக்கின்றனர்.அதே முறையை எங்களால் செய்ய முடியும். ஆனால் நேரம் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, இவற்றின் காரணமாக இது வெற்றியளிக்கவில்லை. நாம் இந்த பூவுலகில் வாழ்வது ஒரு சாண் வயிற்றிற்காகும். அதற்குத்தான் இவ்வளவு காலமும் பல வாழ்க்கை முறைகளை மாற்றி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

'தனியொருவனுக்கு உணவு இல்லையேல் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று பெருங்கவி பாரதியார் கூறியுள்ளார். எனவே சேதன விவசாயம் கண்டிப்பாக உணவுத் தன்னிறைவை ஏற்படுத்தும், எப்போது எனின் நமது நாட்டு உற்பத்திகளை நமக்கே பகிர்ந்தளிக்கும் போதே அது உணவுத் தன்னிறைவை ஏற்படுத்தும். இன்று நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற தரமான பொருட்கள் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஒரு உதாரணம் ஒன்றைக் கூறலாம் என நினைக்கிறேன். இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் முதற்தர தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால் தேயிலையின் எஞ்சிய அடிக்கட்டை தான் நமக்கு விநியோகிக்கப்படுகிறது. அது தான் மிகவும் தவறு எனக் கூறுகின்றேன். முதலில் உற்பத்தி செய்ததை நாம் பயன்படுத்திய பின்னர் எஞ்சியதை ஏற்றுமதி செய்தால் கண்டிப்பாக உணவுத் தன்னிறைவு ஏற்படும். இன்று இவ் சேதன விவசாயத்தால் எத்தனை போராட்டங்கள் கிளம்புகின்றன. ஏன் இந்த அவலநிலை நமது நாட்டிற்கு? மிகுந்த மனவேதனை அளிக்கிறது. இலங்கையில் ஒரு விவசாயி தற்கொலை செய்து சாகின்றான் என்றால் அது நமது நாட்டிற்கு கிடைத்த சாபக்கேடாகும். எனவே இலங்கையில் சேதன விவசாயம் இன்னும் ஓரிரு வருடங்களுக்குள் வெற்றியளித்து உணவுத் தன்னிறைவை பூர்த்தி செய்யும்.

வீழ்வது நாமாயினும் வாழ்வது தமிழாகட்டும். வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

# Jaffna Science Association (JSA)
# 28th Executive committee - 2021/2022




## School Science Programme Sponsor

Ratnam Foundation